# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்: 114/மா/2025**

**நாள்: 24.11.2025**

சி. இராஜசேகரபாண்டியன்
சிறுத்தொண்டநல்லூர், தூத்துக்குடி --- முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர், மண்டலம்–7
பெருநகர சென்னை மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

தூத்துக்குடி, சிறுத்தொண்டநல்லூர், மேலத் தெரு, கதவு எண் 5/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சி. இராஜசேகரபாண்டியன் என்பவரின் 26.02.2025 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.02.2025 அன்று பெறப்பட்டு 114/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

தூத்துக்குடி, சிறுத்தொண்டநல்லூர், மேலத் தெரு, கதவு எண் 5/43 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. சி. இராஜசேகரபாண்டியன் என்பவர் தனது 26.02.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் கடந்த 31.01.2020 அன்று சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 வார்டு 82க்கு உட்பட்ட அம்பத்தூர்–மேனாம்பேடு கருக்கு பிரதான சாலையில் துலுக்காணத்தம்மன் கோயில் ஐந்து ஆலமரத்தில் தொடங்கி கருக்கு கிராமம் வரை சுமார் 1.8 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையின் ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு மனு அனுப்பியிருந்தேன். அப்புகார் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து மண்டல அலுவலரிடம் நேரில் சென்று கேட்டேன். தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005–ன் கீழ் மனுவும், அனுப்பினேன். அதற்கு 19.02.2020 அன்று நாளிடப்பட்ட பதில் கடிதம் கிடைத்தது. அதில் ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி மனு அனுப்பியுள்ளீர்கள் எனவும், கருக்கு பிரதான சாலையினை அளந்து தரும்படி அம்பத்தூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வட்டாட்சியரின் அறிக்கை கிடைத்தபின் சட்டநடைமுறைகளை பின்பற்றி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நான் புகார் அளித்து நீண்ட நாட்களாகியும் எந்தவித நடவடிக்கையும் இல்லாததால் கடந்த 27.08.2020 அன்று அம்பத்தூர் மண்டல அலுவலரின் அறிக்கையின்படி சாலையை அளந்து தரும்படி அனுப்பப்பட்ட கடிதத்தின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து

அம்பத்தூர் தாலுகா அலுவலகத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் மனு அனுப்பியிருந்தேன். எனது மனுவுடன் அதற்கான ஆதாரமான அம்பத்தூர் மேனாம்பேடு TNEB காலனி மனைபிரிவு வரைபடம் (அங்கீகரிக்கப்பட்டது) நகலையும் இணைத்திருந்தேன். அதற்கு பொதுதகவல் அலுவலர் அனுப்பிய பதிலில் தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 2(f)ன்படி அலுவலகத்தில் பராமரிக்கப்படும் முடிவுற்ற கோப்புகளின் ஆவணங்களின் நகல்கள் மட்டுமே வழங்க முடியும் எனவும், தாங்கள் கோரிய தகவல் நடவடிக்கை விவரமாக உள்ளதால் தகவல் வழங்க இயலவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னரும் நடவடிக்கை எடுக்கப்படாததால் 08.03.2021 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற வலியுறுத்தி மண்டல அலுவலருக்கு மனு அனுப்பினேன். எனது RTI மனுக்களுக்கு கிடைத்த பதிலில் திருப்தி இல்லாததால் தலைமை தகவல் ஆணையத்திற்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனு அனுப்பினேன். அதன் மீது கடந்த 07.04.2022 அன்று தகவல் ஆணையத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணைக்கு மனுதாரராக நானும் மண்டல அலுவலகம் சார்பில் எக்சிகியூடிவ் இன்ஜினியரும் ஆஜரானோம். விசாரணையின் போது சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது ஒரு நல்ல கோரிக்கை என்றும் அதை செயல்படுத்தலாமே என்றும் தகவல் ஆணையம் தரப்பில் தெரிவித்தார்கள்.

கடந்த 10.12.2024 அன்று தலைமை தகவல் ஆணையரின் உத்தரவின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தகவல்கள் கேட்டு அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005–ன் கீழ் மீண்டும் மனு அனுப்பினேன். அதற்கான பதில் அம்பத்தூர் வட்டாட்சியர் அறிக்கையுடன் இணைத்து அனுப்பப்பட்டிருந்தது. அதில் மேற்குறிப்பிட்ட சாலை அளவீடு செய்யப்பட்டதாகவும் அவ்வாறான ஆக்கிரமணங்கள் எதுவும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவர்கள் கொடுத்த சர்வே எண்ணிற்கான மேப்பை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பார்த்தபோது, 104.4 மீட்டர் என்று உள்ளது. ஆனால் நான் ஆக்கிரமிப்பை அகற்றக் கோரிய சாலை சுமார் 1.8 கிலோமீட்டர் நீளம் உள்ளது.

மேற்குறிப்பிட்ட சாலையின் அகலம் 60 அடி என்பதற்கான ஆதாரமாக அம்பத்தூர் மேனாம்பேடு TNEB காலனி மனைபிரிவு வரைபடம் (அங்கீகரிக்கப்பட்டது) நகலை இத்துடன் இணைத்துள்ளேன். அந்த வரைபடத்தில் புழக்கத்திலுள்ள சாலை 60 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகள் நிறைந்து சாலையின் அகலம் 20 அடியாக குறைந்துள்ளது. சில இடங்களில் 10 அடியாகவும் குறைந்துள்ளது. பட்டரவாக்கம் இரயில்வே கேட்டில் மேம்பாலம் கட்டிய பிறகு வாகன போக்குவரத்து இந்த சாலையில் பலமடங்கு அதிகரித்துள்ளது. இதனால் காலை மற்றும் மாலை நேரங்களில் மிகுந்த போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அந்நேரங்களில் மினிபேருந்துகள் மற்றும் ஆம்புலன்ஸ் செல்வது மிகுந்த சிரமமாகி விடுகிறது. இதனால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர். காலை, மாலை நேரங்களில் பாதசாரிகள் சாலையை கடந்து செல்ல மிகுந்த சிரமப்படுகின்றனர்.

கண்கூடாக ஆக்கிரமிப்பு தெரிகின்ற சாலையிலேயே ஆக்கிரமிப்புகள் இல்லை என தெரிவித்திருப்பது மிகவும் அதிர்ச்சியாக உள்ளது. எனவே தங்களிடம் முறையீடு செய்கின்றேன். தாங்கள் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காத அம்பத்தூர் மண்டல அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும், மேற்குறிப்பிட்ட சாலை மீதான ஆக்கிரமிப்புகளை அகற்றி 60அடி சாலையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். மேலும் கடமையை செய்ய தவறிய மண்டல அலுவலர் மற்றும் உதவிப் பொறியாளர் உள்ளிட்ட அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்."எனத் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 08.04.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரிடம் கோரப்பட்டது.

3. பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 (அம்பத்தூர்)–ன் மண்டல அலுவலர் 04.11.2025 நாளிட்ட கடிதம் ம.க.7 ந.க. எண் 7266/2025–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:–

‘‘பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7 பகுதி 18 கோட்டம் 82–க்கு உட்பட்ட கருக்கு பிரதான சாலை மேனாம்மேடு ஐந்து ஆலமரம் சந்திப்பு முதல் கருக்கு ரயில்வே மேம்பாலம் வரை உள்ள பகுதியில் ஆக்கிரமிப்பினை அகற்றுவது என்பது பெருநகர சென்னை மாநகராட்சியால் மட்டும் செய்ய இயலாது. தமிழ்நாடு அரசு வருவாய் துறையுடன் இணைந்து செயல்பட வேண்டிய செயலாகும். காரணம் நிலம் சம்பந்தமான ஆவணங்கள் மற்றும் கோப்புகளை பராமரிப்பது அரசு வருவாய் துறை மட்டுமே என்பதை தங்களின் கனிவான பார்வைக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

மேற்படி சாலையை அளந்து எல்லை வரையறை செய்து தருமாறு 28.10.2022 முதல் 03.11.2025 வரை தொடர்ந்து வட்டாட்சியர் அவர்களுக்கு பல்வேறு நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகிறது. தொடர்ந்து வட்டாட்சியர் அவர்களுக்கு வற்புறுத்தலின் பேரில், மிகவும் குறுகலான பகுதியாக உள்ள ஆரா குளம் முதல் கருக்கு ஆலமரம் வரை உள்ள (கிராமம்–மேனாம்பேடு பிளாக் 21 நகர புல எண் 64 பழைய புல எண்.45/pt. வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு, அடங்கல் ரோடு, விஸ்தீரணம் 0.727.0) பகுதியை அளந்து ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று வட்டாட்சியரால் அறிக்கை அளிக்கப்பட்டது.

மேலும் மேற்படி சாலையானது மேனாம்பேடு மற்றும் கருக்கு கிராமம் ஆகியவற்றின் பூர்வீக கிராம சாலையாகும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய குடியிருப்பு பகுதி, விவசாய நிலங்களாக இருந்து பின்பு குடியிருப்பு மனைகளாக மாற்றம் செய்யப்பட்டபோது அகலமான சாலைகளாக மனை உரிமையாளர்களால் வரையறை செய்யப்பட்டவையாகும். அதே அளவு அகலத்தை சாலையின் முழுமைக்கும் மனுதாரர் எதிர்பார்ப்பது சாத்தியமில்லாதது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கடந்த 07.04.2022 அன்று தகவல் ஆணையத்தில் மாநகராட்சி செயற்பொறியாளர் மற்றும் மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகி விளக்கம் அளித்த போது ‘‘தகவல் ஆணையர் அவர்கள் சாலை ஆக்கிரமிப்புகளை அகற்ற கோருவது ஒரு நல்ல கோரிக்கை என்றும் அதை செயல்படுத்தாலேமே’’ என்று தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். இதுகுறித்து வட்டாட்சியர் அவர்கள் அம்பத்தூர் வட்டம் விடுபட்ட பகுதியான மேனாம்பேடு ஐந்து ஆலமரம் சந்திப்பு முதல் ஆரா குளம் வரை உள்ள கருக்கு பிரதான சாலை அளந்து எல்லை வரையறை செய்து தந்து ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டால் உடனடியாக காவல் துறையின் ஒத்துழைப்புடன் ஆக்கிரமிப்புகள் இருப்பின் உடனடியாக அகற்றப்படும் என்பதை பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

எனவே, திரு. சி. இராஜசேகரபாண்டியன் அவர்களின் மனு மீதான தன்னிலை விளக்கத்தினை ஏற்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இந்த விசாரணையை முடித்து வைக்குமாறு பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.’’ எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 05.11.2025 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.10.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 05.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"நான் கடந்த 31.01.2020 அன்று சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 வார்டு 82க்கு உட்பட்ட அம்பத்தூர்–மேனாம்பேடு கருக்கு பிரதான சாலையில் துலுக்காணத்தம்மன் கோயில் ஐந்து ஆலமரத்தில் தொடங்கி கருக்கு கிராமம் வரை சுமார் 1.8 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையின் ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு மனு அனுப்பியிருந்தேன். பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் தன்னுடைய கடிதத்தில் கருக்கு பிரதான சாலையினை அளந்து தரும்படி அம்பத்தூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வட்டாட்சியரின் அறிக்கை கிடைத்தபின் சட்டநடைமுறைகளை பின்பற்றி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் 29.01.2025 அன்று எனக்கு வழங்கப்பட்ட தகவலில் சர்வே எண்.64 என்று குறிப்பிட்டு சுமார் 100 மீட்டர் நீளமுள்ள சாலை என்று குறிப்பிட்டு எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று சொல்லப்பட்டது. நான் புகார் மனுவில் குறிப்பிட்ட சுமார் 1.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பற்றி எந்த தகவலும் இல்லை.

அம்பத்தூர் மேனாம்பேடு TNEB காலனி அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவிற்குரிய வரைபடத்தில் புழக்கத்திலுள்ள சாலை 60 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகள் நிறைந்து சாலையின் அகலம் 20 அடியாக குறைந்துள்ளது. சில இடங்களில் 10 அடியாகவும் குறைந்துள்ளது. இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது. அங்குள்ள ஆக்கிரமிப்பை அகற்றி மழைநீர் வடிகால் கட்டவும், 60அடி சாலையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காத அம்பத்தூர் மண்டல அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.''.

6. எதிர்மனுதாரர் தரப்பில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இளநிலை பொறியாளர் 05.11.2025 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:

"மனுதாரர் மனு குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மனுதாரர் குறிப்பிட்ட சாலையை அளந்து எல்லை வரையறை செய்து தருமாறு 28.10.2022 முதல் 03.11.2025 வரை தொடர்ந்து வட்டாட்சியர் அவர்களுக்கு பல்வேறு நினைவூட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டு வருகிறது. மிகவும் குறுகலான பகுதியாக உள்ள ஆரா குளம் முதல் கருக்கு ஆலமரம் வரை உள்ள கிராமம்–மேனாம்பேடு பிளாக் 21 நகர புல எண்.64 பழைய புல எண்.45/pt வகைப்பாடு சர்க்கார் புறம்போக்கு, அடங்கல் ரோடு, விஸ்தீரணம் 0.727.0 பகுதியை அளந்து ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று வட்டாட்சியரால் அறிக்கை அளிக்கப்பட்டது.

மேற்படி சாலையானது மேனாம்பேடு மற்றும் கருக்கு கிராமம் ஆகியவற்றின் பூர்வீக கிராம சாலையாகும். மனுதாரர் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு மின்சார வாரிய குடியிருப்பு பகுதி, விவசாய நிலங்களாக இருந்து பின்பு குடியிருப்பு மனைகளாக மாற்றம் செய்யப்பட்டபோது அகலமான சாலைகளாக மனை உரிமையாளர்களால் வரையறை செய்யப்பட்டவையாகும். அதே அளவு அகலத்தை சாலையின் முழுமைக்கும் மனுதாரர் எதிர் பார்ப்பது சாத்தியமில்லாதது.

மேலும் அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களை நேரில் தொடர்பு கொண்டு மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக அறிக்கை விரைவில் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் விடுப்பட்ட சுமார் 1.6 கிலோ மீட்டர் பகுதியான மேனாம்பேடு ஐந்து ஆலமரம் சந்திப்பு முதல் ஆரா குளம் வரை உள்ள கருக்கு பிரதான சாலை அளந்து எல்லை வரையறை செய்து தந்து ஆக்கிரமிப்புகள் கண்டறிப்பட்டால் உடனடியாக காவல் துறை உதவியுடன் அகற்றப்படும் என்பதை இம்முறை மன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்து கொள்கிறேன்.''.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 7–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:–

மனுதாரர் கடந்த 31.01.2020 அன்று சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 வார்டு 82க்கு உட்பட்ட அம்பத்தூர்–மேனாம்பேடு கருக்கு பிரதான சாலையில் துலுக்காணத்தம்மன் கோயில் ஐந்து ஆலமரத்தில் தொடங்கி கருக்கு கிராமம் வரை சுமார் 1.8 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையின் ஆக்கிரமிப்புகளை அகற்றும்படி அம்பத்தூர் மண்டல அலுவலருக்கு அனுப்பிய மனு குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல அலுவலர் கருக்கு பிரதான சாலையினை அளந்து தரும்படி அம்பத்தூர் வட்டாட்சியருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாகவும், வட்டாட்சியரின் அறிக்கை கிடைத்தபின் சட்டநடைமுறைகளை பின்பற்றி ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது என்பதும், ஆனால் 29.01.2025 அன்று தனக்கு வழங்கப்பட்ட தகவலில் சர்வே எண்.64 என்று குறிப்பிட்டு சுமார் 100 மீட்டர் நீளமுள்ள சாலை என்று குறிப்பிட்டு எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது என்பதும், தான் மனுவில் குறிப்பிட்ட சுமார் 1.8 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலை பற்றி எந்த தகவலும் இல்லை என்பதும், அம்பத்தூர் மேனாம்பேடு TNEB காலனி அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவிற்குரிய வரைபடத்தில் புழக்கத்திலுள்ள சாலை 60 அடி என்று குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் இருபுறமும் ஆக்கிரமிப்புகள் நிறைந்து சாலையின் அகலம் 20 அடியாக குறைந்துள்ளது என்பதும், சில இடங்களில் 10 அடியாகவும் குறைந்துள்ளது என்பதும், இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது என்பதும், அங்குள்ள ஆக்கிரமிப்பை அகற்றி மழைநீர் வடிகால் கட்டவும், 60அடி சாலையை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரவும் மேற்கண்ட ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை எடுக்காத அம்பத்தூர் மண்டல அலுவலர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படியும் கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

மனுதாரர் மனு குறித்து கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என்பதும், மனுதாரர் குறிப்பிட்ட சாலையை அளந்து எல்லை வரையறை செய்து தருமாறு வட்டாட்சியரை கோரியதற்கு மிகவும் குறுகலான பகுதியாக உள்ள ஆரா குளம் முதல் கருக்கு ஆலமரம் வரை உள்ள கிராமம்–மேனாம்பேடு பிளாக் 21 நகர புல எண்.64 பழைய புல எண்.45/pt விஸ்தீரணம் 0.727.0 பகுதியை அளந்து ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று வட்டாட்சியரால் அறிக்கை அளிக்கப்பட்டது என்பதும், மேலும் அம்பத்தூர் வட்டாட்சியர் அவர்களை நேரில் தொடர்பு கொண்டு மேற்கண்ட ஆக்கிரமிப்பு தொடர்பாக அறிக்கை விரைவில் பெற உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டம் விடுப்பட்ட சுமார் 1.6 கிலோ மீட்டர் பகுதியான மேனாம்பேடு ஐந்து ஆலமரம் சந்திப்பு முதல் ஆரா குளம் வரை உள்ள கருக்கு பிரதான சாலை அளந்து எல்லை வரையறை செய்து தந்து ஆக்கிரமிப்புகள் கண்டறிப்பட்டால் உடனடியாக காவல் துறை உதவியுடன் அகற்றப்படும் என்பதும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை பொறியாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், சென்னை மாநகராட்சி, மண்டலம் 7 வார்டு 82க்கு உட்பட்ட அம்பத்தூர் வட்டம் 1.8 கிலோ மீட்டர் பகுதியான மேனாம்பேடு ஐந்து ஆலமரம் சந்திப்பு முதல் கருக்கு பிரதான சாலையில் 0.727.0 விஸ்தீரணத்திற்கு ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்று வட்டாட்சியர் தெரிவித்த நிலையில், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் இளநிலை பொறியாளர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, மீதமுள்ள 1.6 கிலோமீட்டர் நீளமுள்ள சாலையின் ஆக்கிரமிப்புகள் குறித்து அம்பத்தூர் வட்டாட்சியரை நேரில் தொடர்பு கொண்டு ஆக்கிமிப்பு குறித்து அறிக்கை பெற உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள 1.8 கிலோ மீட்டர் சாலையினை மீண்டும் கள ஆய்வு செய்து ஆக்கிரமிப்பினை அகற்ற மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் மாண்பமை உச்சநீதி மன்றம் வழிகாட்டுதல்களின்படி உரிய சட்டப்பூர்வ நடவடிக்கையினை அம்பத்தூர் வட்டாட்சியருடன் இணைந்து மூன்று மாதத்திற்குள் மேற்கொள்ளுமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 7–ன் மண்டல அலுவலருக்கு உத்திரவிடுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. சி. இராஜசேகர பாண்டியன்,
கதவு எண் 5/43, மேலத் தெரு,
சிறுத்தொண்டநல்லூர்,
தூத்துக்குடி–628 802.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 7,
பெருநகர சென்னை மாநகராட்சி,
திருவள்ளூர் நெடுஞ்சாலை,
சென்னை–600 083.

(4) வட்டாட்சியர், அம்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகம்,
அம்பத்தூர், சென்னை–600 053.

(5) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
மழைநீர் வடிகால் துறை,பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.